அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா

***35627—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டையில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டை கிராமத்தில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அரக்கோணம் தொகுதி, செம்பேடு ஊராட்சி, குருவராஜபேட்டை கிராமத்தில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு, அந்தப் பகுதியில் உள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களாயின், நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி, இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய

2014 ஜூலை 25]

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் நலன் காக்க ஆக்கமும், நெசவுத் தொழில் செழிக்க ஊக்கமும் தந்து, நெசவாளர் மக்களின் நெஞ்சத்தில் குடியிருக்கும் நெசவாளர்களின் ஒளி விளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.400/-லிருந்து ரூ.1000/-ஆக உயர்வு, குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550/-லிருந்து ரூ.1000/-ஆக உயர்வு, பத்தாயிரம் நெசவாளர்களுக்கு 2,60,000 ரூபாய் மதிப்பீட்டில் பசுமை வீடுகள், கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் என விலையில்லா மின்சாரம் என அடுக்கடுக்கான திட்டங்களை நெசவாளர் மக்களுக்கு வாரி வழங்கி, நெசவாளர் மக்களின் உள்ளத்திலும், இல்லத்திலும் வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட குருவராஜபேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் வளர்புரம், தக்கோலம், நாகவேடு, சம்பத்துராயன்பேட்டை, நெமிலி, பனப்பாக்கம், திருமால்பூர், வங்கனூர், ஆர்.கே.பேட்டை, பொதட்டூர்பேட்டை போன்ற பல்வேறு கிராமங்களில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

முற்பகல் 10-35

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெசவாளப் பெருங்குடி மக்கள் விசைத்தறித் தொழிலை குடிசைத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். அந்த விசைத்தறி நெசவாளர்கள் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அவர்களிடத்திலே முதலீடு இல்லாத காரணத்தால் அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள்.*

ஆகவே, அந்தப் பகுதியிலே நெசவுத் தொழிலைக் குடிசைத் தொழிலாகச் செய்துவரும் நெசவாளப் பெருங்குடி மக்கள் நெய்த லுங்கிகள் எல்லாம் இன்றைக்கு விற்பனையாகாமல் தேக்கமாக உள்ளன. நெசவாளர் மக்களின் தாயாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே அங்கே தேங்கிக் கிடக்கும் லுங்கிச் சரக்குகளை கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி மையம் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், அதுபோல, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்திலே நூல் வழங்க மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதியில் குருவராஜபேட்டையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளதுபோல, ஒரு ஜவுளிப் பூங்காவினை அமைப்பதற்குள்ள சாத்தியக் கூறுகளை ஆராய கைத்தறித் துறை சார்பில் மனு பெற்ற பின்பு, ஒரு ஆலோசனைக் கூட்டம் கடந்த 14-6-2014 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை அதிகாரிகள் மற்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள்கூட கலந்துகொண்டுள்ளார்கள். அந்தப் பகுதியிலே உள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் உள்ளிட்ட 60 நபர்களும் கலந்து கொண்டுள்ளனர். இக்கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதுபோல, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்குத் தேவைப்படும் நிலம் தொழில்முனைவோர்களால் வாங்கப்பட வேண்டுமெனவும், திட்ட மதிப்பீட்டில் 51 சதவீதம் தொழில்முனைவோர் மற்றும் வங்கிக் கடன்மூலமாக முதலீடு செய்யப்படும்பட்சத்தில், உட்கட்டமைப்பு வசதிகள், கட்டட வசதிகள் உள்ளிட்ட இனங்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 40 சதவீதத்தை மத்திய அரசும், 9 சதவீதத்தை மாநில அரசும், மானியமாக வழங்கும் என்ற விவரங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டு இந்தக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திலே கலந்து கொண்ட தொழில்முனைவோர்கள் தங்களால் நிலம் வாங்கி முதலீடு

2014 ஜுலை 25]

செய்வதும் நாடா இல்லாத தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளைப் பற்றியும் தெரியப்படுத்திய காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் கேள்வியிலே கேட்டபடி தொழிற்பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. இருந்தாலும், இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அவர்கள் அங்கே உற்பத்தியான சில பொருட்கள் வாங்கப்படாமல் இருக்கின்றன. அவை கைத்தறித் துறையின் தலைமை சொசைட்டியாக இருக்கக்கூடிய கோ-ஆப்டெக்ஸ் மூலமாகப் பெறப்படுமா என்பதைக் கேட்டுள்ளார்கள். துறை அதிகாரிகள் மூலமாக அந்தந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று, எந்தப் பொருள்கள் விற்காமல் தேங்கியிருக்கின்றன என்பது பற்றியும், விற்பனைக்குரிய சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு, தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

அடிப்படை வசதிகள்

***30655—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லாரிலுள்ள அரசு பழப் பண்ணை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS